செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

உ

வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

# இந்துசாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 10.

ஆரம்பம்: விரோதி ஆவணி (1889) ஆவணி மீ 28உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அo] யாழ்ப்பாணம்:- கீலக ஆண்டு மார்கழி மீ ௬ உ வெள்ளிக்கிழமை (20-12-1968) [இலங்கை

# மார்கழிமாத மங்கையர்நோன்பு

## சபைமேலோங்கிவளர்வதாக

### பண்டிதர் மு. வேதாரணியர் அவர்களுடைய பதிலுரை

எனது ஆசிரியர் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்கள் எனக்கு விளக்கிய ஒரு சுலோகத்தை எடுத்துக்கூறி அதன்கருத்தையும் தெரிவிக்கின்றேன்.

"இதர தாப சதாநி யதேச்சயா
விதர தாநி சகே சதுரா நந
அரசி கேஷு ரஸஸ்ஸிய நிவேதநம்
சிரசி மாலிக மாலிக மாலிக".

இதன் பொருளாவது:- ஒப்பிரமாவே! உமமுடைய இஷ்டப்படி நூறு வகையான துன்பங்களைத்தானும் எனக்குக் கொடும். அவற்றையெல்லாம் பொறுத்துக்கொள்வேன். ஆனல் காவியங்களின் சுவைகளை அறிந்துகொள்ளமாட்டாத மூடர்களிடத்திலே காவியங்களின் சுவைகளைத் தெரிவிப்பதை மாத்திரம் என்னுடைய தலையிலே எழுத வேண்டாம் என்பதாம்.

நாம் எடுத்த பிறவியில் அனுபவிக்கின்ற இன்பங்கள்,

"அடகேரி தோடர வீழ
ஐந்தலை நாகம் கண
இடிகிணற் றுகின் வேரைப்
பற்றி நான்றிட — அவ்
வேரைக
கடுகேவோர் எலியும் வந்து
கறித்திட அதில் நின்றேனுக்
கிடைதுளி தேன் நக்கின்பம்
போலும் இப்பிறவி இன்டம்"

அதாவது; யானை ஒன்று துரத்திக் கொண்டுவர ஒருவன் ஒரு பாழ்ங் கிணற்றில் குதிக்கப் போகின்றான். அச்சமயத்தில் அக்கிணற்றுக்குள்ளே ஓர் ஐந்தலை நாகம் அவனை விழுங்குவதற்காக வாய் அங்காந்து கொண்டு கிடக்கின்றது. அவன் கிணற்றோரத்தில் தூங்குகின்ற அறுகம் வேரைப் பற்றிகொண்டு தூங்குகின்றான். அதே சமயத்தில் ஓர் எலி அவ்வேரைக் கடிக்கின்றது. அவன் அந்தரத்தில் வாய் அண்ணாந்து கொண்டு நிற்கின்றான். அச்சமயம் மேலே இருக்கும் மரக்கொம்பில இருந்து ஒரு துளி தேன் அவன் நாக்கில் விழுகின்றது. இத்தேனைச் சுவைத்த இன்பம்போலும் இப் பிறவி இன்பம். அதுபோலவே, நானே வயோதிபகாலத்திற்குரிய நோய்களால் வருந்துகின்றேன். இந்த நேரத்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

### ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் திருவுருவச்சிலை தாபிக்கப்பெற்றது

சிதம்பரத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானல் ஸ்தாபிதம் செய்யப்பெற்ற சைவப்பிரகாச வித்தியாசாலையில் கார்த்திகைத் திங்கள 26-ஆம் நாள் நடைபெற்ற 89-ஆவது ஆண்டு குருபூசை விழாவின் போது ஸ்ரீ-ல-ஸ்ரீ நாவலர் நாவலர் பெருமானின் திருவுருவப்படம்போல் 50 கிலோ பஞ்சலோகத்தால் 1¾ (ஒன்றே முககால்) அடி உயரததில் திருவருவச் சிலை புதிதாகச் செய்யப்பட்டு தாபிககப்பெறறது. ஸ்ரீ சேக்கிழார் கோயிலிலிருந்து நாதசுர வாத்திய மங்கள இசையுடனும், வாண வேடிகளுடனும் ஆசிரியர்கள் — மாணவாகள புடை சூழ வித்தியாசாலை மண்டபதத்ற்கு புத்தாகச் செய்பப்பெறறுளள மஞ்சததில் வைத்து அலங்காரமாக வீதியுலாக் கோண்டு வந்தனர் காலை 9 மணிககு வழமைபோற் குருபூசையும் 11 மணியளவில் நடராசப் பெருமானுக்குத் திருமுழுக்கும் நடைபெற்றது. ஏராளமான சைவ அன்பாகள் இந் நிகழ்ச்சகளில் கலந்துகோண்டு சிறப்பித்தனா.

'இந்துசாதனம்' சிதம்பர நிருபா
ஸ்ரீ மா. பாலசுப்பிரமணியன்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஆதியு மந்தமு மில்லா
அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக்
கேட்டேயும்
வாட்டடங்கண்
மாதே வளருதியோ
வன்செவியோ
நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள்
வாழ்த்திய
வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே
விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே
னின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாளென்
னேயென்னே
ஈதே யெந்தோழி பரிசேலோ
ரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்
— மாணிக்கவாசகசுவாமிகள்

ஸ்வாமி சிவானந்த சச்சிதானந்த சாஸ்வதி
சிவானந்த தபோவனம், திருகோணமலை.

மார்கழி மாதத்தில் பாவை நோன்புநோற்பது பண்டைக் காலத்து மங்கையரின் வழக்கமாயிருந்தது. இந்த நோன்பின் மகத்துவத்தைப் புலப்படுத்துவன மணிவாசகர் அருளிய திரு-எம்பாவையும் ஆண்டாள் அருளிய திருப்பாவையும். ஆயர் பாடியிலே கண்ணனும் ஆய்ச்சியரும் யௌவனப் பருவ விளையாடல் செய்து திரிந்தாராக அதனைக் கண்ட முதியோரான ஆயர் கண்ணனைப் பெண்கள் விளிக்கலாகாது என்று கருதி அவ் ஆயர் மங்கையரை நிலவறையில் அடைத்தார்கள். அன்று தொட்டு அவ் ஆயர் பாடியில் மழை பெய்யாது போக ஆயர்கள் அப்பெண்களை அழைத்து மழை வேண்டி நோற்பீர்களாக என்று ஏவினர். அவர்களும் தாம் முன்பு கண்ணனையே தலைவனாக அடைய வேண்டும் என்று கருதியிருந்தாராகலின் மழை பெய்யாக் குறையை நீக்க வேண்டிக் கண்ணனைத் தலைமையாக நியமித்துக் கொண்டு தங்கள் தோழிமாரையும் துயிலுணர்த்தி அழைத்துவந்து யமுனை நதியில் நீராடி நோற்றுக் கண்ணனை நாயகனாக அடைந்து கொள்ளும் விருப்பம் நிறைவேற்றப் பெற்றார்கள் என்பதே திருப்பாவையின் வரலாறாகும்.

இன்றும்கூடப் பருவமங்கையர் திருவெம்பாவையிலுள்ள முதலாம் எட்டாம் பத்தொன்பதாம் இருபதாம் பாடல்களைத் தினநதோறும் பாராயணம் செய்து வரின் மாங்கல்யப் பேற்றைப் பெறுவார்கள். அத்துடன் செவ்வாய் வெள்ளிக்கிழமைகள் தோறும் ஒரு அரசடியிலுள்ள விநாயகரையும் அரசவிருட்சத்தையும் ஒன்பதுமுறை வலம்வந்து தீபதூபமேற்றி வணங்க வேண்டும். சிவானந்த தபோவனத்தில்இதற்காக ஒரு அரசமரம் வளர்த்து விநாயகர் வழிபாடு ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. பௌத்த மதத்தைச் சார்ந்த

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

### திரு வெம்பாவைப் பூசை

வழமைபோற் சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் திருவெம்பாவைப் பூசையும் திருவாதவூரடிகள் புராண படனமும் 25-12-68 தொடக்கம் 3-1-69 வரையும் நடைபெறும்.



யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாரது ஆதரவில் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்பெருமான் குருபூசை விழாக் கொண்டாடப்பட்டபோது (11-12-68) இருபாலையைச் சார்ந்த பண்டிதர் மு. வேதாரணியர் அவர்கள் சபையின் உபதலைவர் "அறநெறிக் காவலர்" முதலியார் செ. முத்துத்தம்பி அவர்களால் பொன்னடை போர்த்திக் கௌரவிக்கப்பெறுவதை இங்கே காண்கிறீர்கள்.

பக்திக்கு அடுத்தது சுத்தம்
சுத்தம் சுகம் தரும்.




மில்க்வைற்சோப்
வாங்கிப் பாவித்து
அதிக இலாபமடையுங்கள்.

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

கீலகஞு மார்கழி மீ ௬-௨ வெள்ளிக்கிழமை [1968]

## நாவலர் திருவுள்ளத்தின்படி தோன்றிய சைவப் பிரசாரகர்

—::—

இருபாலைப் பண்டிதர் மு. வேதாரணியம் அவர்கள் பரம்பரையான சைவக் குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய தந்தையாராய முத்துக்குமாரசுவாமி என்பவர் நாவலருடைய மாணவன். திரு. வேதாரணியம் அவர்கள் நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையில் முற்காலத்தில் நடத்தப்பட்ட காவிய வகுப்பில் சுன்னுகம் திரு. அ. குமாரசுவாமிப் புலவர், திரு. த. கைலாய பிள்ளை போன்ற பெரியார்களிடம் கல்வி கற்றனர். பண்டிதர் வ. மு. இரத்தினேசுவரஐயர் அவர்கள் அவருடைய சக மாணவன். இருவரும் அக்காலம் நடத்தப்பட்ட பண்டித பரீக்ஷையில சித்திபெற்றவர்கள்.

பண்டிதர் வேதாரணியம் அவர்கள் பிள்ளைகளுக்குத் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்பித்து வந்தனர். அவரிடம் தமிழ் கற்றவர்களிற் பலர் பண்டிதர்களாகவும், பட்டதாரிகளாகவும் தோன்றியுள்ளனர். அவர்கள் புராணபடனத் தொண்டினை யாழ்ப்பாணத்திலுள்ள பல தேவாலயங்களிலும் மடாலயங்களிலும் சிறப்பாக நடாத்திவந்தனர். நாவலர்பெருமான் புராண படன விதியிற் காட்டியவண்ணம் புராணங்களுக்குப் பொருள் சொல்ல வல்லவர். வேண்டிய இராகங்களுடன் சொற்பிழை கருத்துப்பிழை யில்லாமல் செய்யுட்களுக்குப் பொருள் கூறுவார். கேட்பவர்கள் அவருடைய உரையைக் கேட்டு ரசித்துக் கடவுட்பக்தியைப் பெருக்கிக்கொண்டனர்.

பண்டிதர் வேதாரணியம் அவர்கள் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்கு 1940-ம் ஆண்டு தொடக்கம் புராணபடனத் தொண்டினைப் புரிந்துவந்தனர் கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் ஆகிய மூன்றினையும் வருடமொன்றுக்கு ஒரு புராணமாகப் படிக்க உதவிபுரிந்தனர். இப்பொழுது யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினது சமயத் தொண்டுகளுக்கு நிலைக்களமாய கல்லூரிவீதியிலுள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தினுடைய தோற்றத்திற்கு வித்திட்டவர் அவரே.

சைவப் பிரசாரகர்கள், சமய விசேட நிர்வாண தீக்ஷைப் பேறுடையவர்களாகவும் சிவபூஜா துரந்தரர்களாகவும் வாழவேண்டுமென்பது நாவலருடைய உள்ளக் கிடக்கை. அவருடைய திருவுள்ளப்படி விசேட தீக்ஷை பெற்றுச் சிவபூஜா துரந்தரராக வாழ்க்கையை நடாத்துகின்ற சிறப்பையுடையவர் நமது பண்டிதரவர்கள். 11-12-68 அன்று யாழ்ப்பாணம சைவபரிபாலன சபையார் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் முதலியார் செ. முத்துத்தம்பி அவர்களின் தலைமையில நடாத்திய நாவலர் குருபூசை விழாவில் அவருக்குப் பொன்னுடை போர்த்தி அவரைக் கௌரவித்தனர். அவருடைய சேவையைத் தலைவர் அவர்களும சமயப் பிரசார அமைச்சரும் பாராட்டினார்கள். அவர் கூறிய பதிலுரையை இப்பிரசுரத்தின் பிறிதோரிடத்திற் காண்க.

x x x

## சிவராத்திரியும் திருக்கேதீச்சரமும்

சிவ விரதங்களில் உத்தமமானது சிவராத்திரி விரதம். மக்கள் உபவாசமிருந்து நான்கு யாமமும் சிவபெருமானைச் சிவலிங்கத்திற் தரிசனஞ்செய்து நித்திரை விழித்து இவ்விரதத்தை அநுட்டிப்பார்கள். இவ்விரதத்தை அநுட்டிக்கும் அடியார்கள் பலர் திருக்கேதீச்சரம் செல்வர். சென்றவருடம் 25000 பேர்வரையில் அங்கு சென்று திருக்கேதீச்சரத்தானை வழிபட்டனர். இவ்வடியார்கள் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் செல்வர். இவர்களுள் பெரும் பகுதியினர் யாழ்ப்பாணத்திலிருந்து செல்பவர்களே. இவர்கள தங்கள் யாத்திரையைப் புரிவதில் பெருங் கஷ்டப்படுகின்றார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து பஸ் வண்டிகள் போதுமான அளவுக்கு அனுப்பப்படாமையும் புகையிரத சேவை இல்லாமையுமே முக்கிய காரணங்களாகும். இவ்வாண்டு சிவராத்திரிதினம் 15-2-69 ஆகும் ஆகையினல் யாத்திரை செய்பவர்களுடைய வசதிக்காக அரசாங்கம் 14-2-69ல் அன்றும் 15-2-69ல் அன்றும் போதியளவு பஸ்வண்டிகளை யாழ்ப்பாணத்திலிருந்து திருக்கேதீச்சரத்திற்கு அனுப்புதல் வேண்டும். சிவராத்திரி தினத்திற்காகக் காங்கேசன் துறையிலிருந்து விசேஷ புகையிரத சேவையை ஏற்படுத்துவதும் மேற்படி யாத்திரீகர்களின் கஷ்டங்களைக் குறைப்பதற்கு ஏதுவாகவிருக்கும். இந்துசாதனம் ஆங்கிலப் பிரசுரத்தில் ஓர் அன்பர் இதனைப்பற்றி ஒரு விரிவான கட்டுரை வெளியிட்டிருக்கின்றார். பொதுசனங்களும் யாழ்ப்பாணத்திலுள்ள பள்ளிககூட அதிபர்களும் அரசாங்கத்துக்கு மனுப்பண்ணித் திருக்கேதீச்சரத்தில் சிவராத்திரி வழிபாடு செய்ய விரும்பும் யாத்திரீகர்களுக்கு ஏற்படும கஷ்டங்களைக் களைய வழிவகுப்பார்களாக.

——::——

## நாவலர் காட்டிய பாதையில் நடப்போம்

### யாழ். நா. சைவசமய அபிவிருத்திக் கழக நாவலர் விழாவில் கழகத் தலைவர்

"நாவலர் பெருமான் எமக்குக் காட்டிய பாதை பரிசுத்தமானது; சைவ நன் மக்கள் அவ் வழியிலே ஒழுகவேண்டியது மிக அவசியம். அவரது ஒழுக்கம், நீதி, துணிவு, சைவத்தில் முறுகிய பற்று, இடைவிடா முயற்சி முதலானவை எம் வாழ்விலே செறிதல் வேண்டும். அன்றுதான் எமக்கு உன்னதமான இலட்சியங்கள் கைகூடும. வெறும் நடிப்புச் சைவராய் இருப்பதால் எவ்விதபயனும் இல்லை"

இவ்வாறு சென்ற 11-12-68 புதன்கிழமை இரவு நாயன் மார்கட்டு ஸ்ரீ இராச இராசேசுவரியம்பாள் கோயில் மகா மண்டபத்தில் நிகழ்ந்த நாவலர்பெருமான் குருபூசை விழாவிற்குத் தலைமை தாங்கி உரையாற்றியபோது திரு. க சொக்கலிங்கம் (சொக்கன்) குறிப்பிட்டார் இவ் விழா நாயன்மார்கட்டுச் சைவசமய அபிவிருத்திக்கழகத்தின் ஆதரவில் நடைபெற்றது.

திரு. சொக்கன் அவர்கள் தமது தலைமை யுரையின் போது மேலும் கூறியதாவது:— 'நாவலர்பெருமான் தோன்றியிராவிடில் இந்நாட்டில் கிறிஸ்தவம் விரிந்து பரந்திருக்கும்; மருந்துக்குக்கூட ஒரு சைவப் பாடசாலை இருந்திருக்கமாட்டாது. இன்று சைவப் பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் சைவ சமயத்தையும், தமிழ்ப் பண்புகளையும் கற்கும் மாணவர்கள் இந் நிலையில் தாம் கற்றற்கு உறுதுணை புரிந்த மகான் நாவலர் என்பதை ஒவ்வொரு கணமும் நினைவிலிருத்தல் வேணடும். சைவமக்களிலும் சைவ மாணவர்களே நாவலர்பெருமானால் அதிக பயன் அடைந்திருக்கிறார்கள். அவர்கள் இந் நன்றியை மறவாது அவர் வகுத்த வழியிலே ஒழுகுவார்களானால் இந்துசைவத் திருநெறி தழைத்தோங்கும என்பதற்கு ஐயமேஇல்லை".

தலைமை உரையைத்தொடர்ந்து விழா உபயகாரரான திருமதி. செ. இரத்தினசபாபதியால் திருமுறைப் பண் இசைக்கச்சேரியும், கழகச் சிறுமியரின் சொற்பொழிவு, பாடல், நாவலர்கும்மி ஆகிய நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. கழகச்செயலாளர் "நாவலர்பெருமானது நூல்கள்" கல்வி நிலையங்களில் தகுந்த ஆசிரியர்களால் பயிற்றப்படவேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர். (ந. நி.)

## ஈழத்துச் சிதம்பரத்தில் திருவெம்பாவை உற்சவம்

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமான் ஆலய மூலமூர்த்திகள் பாலஸ்தாபனம் செய்யப்பெற்றிருப்பதால் மேற்படி ஆலயத்தில் திருவெம்பாவைக்காலங்களில் விழா நடைபெறமாட்டாது. ஆயினும் வழமைபோல் விஷேச அபிஷேக ஆராதனைகள் திருவெம்பாவைப் படிப்பு என்பன நடைபெறும். 2-1-69 வியாழக்கிழமை இரவு 2-30 மணியளவில் சிவகாமசுந்தரி சமேத நடேசப்பெருமானுக்கு ஆர்த்திரா அபிஷேகம் நடைபெறும்.

x x x

## மணிவாசகர் விழா

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் மணிவாசகர் சபையினரால் மேற்படி ஆலய மண்டபத்தில் நடாத்தப்பெற்றுவரும் மணிவாசகர் விழா இவ்வருடமும் சிறப்புற நடைபெறும் ஆலய விழாக்கள் எதுவும் நடைபெறுமையால் திருவாசகத் திருமுறை ஊர்வலம் நடைபெறமாட்டாது. மேற்படி விழாவின்போது ஈழத்து அறிஞர் பலர் கலந்து ஆய்வுரை நிகழ்த்துவர்.

(காரைநகர் நிருபர்)

## அணிந்துரை அரங்கம்

### விவேகானந்தா திருக்குறட் கலண்டர்

விவேகானந்தா அச்சக நிலையத்தார் அழகான படங்களுடன் 1969-ஆம் ஆண்டுக்குரிய கலண்டரை வழமை போல வெளியிட்டிருக்கின்றனர். திதி, நட்சத்திரம், போயாதினம், விசேட விடுமுறைநாட்கள் காட்டப்பட்டிருக்கின்றன. ஒரு திகதியில் ஒரு திருக்குறளும் அடுத்த திகதியில் அக் குறளின் பொழிப்புரையுமாகத் தொடர்ந்து வெளியிடப்பட்டிருக்கின்றன. வித்தியாசாலைகளிலும் கந்தோர்களிலும் வீடுகளிலும் தொழிறசாலைகளிலும் உபயோகித்துக்கொள்ளத் தக்கவை. எமக்கு அனுப்பிய கலண்டர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

## சபை மேலோங்கி

(1-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

தில் இச்சபையார் எனக்குப் பொன்னுடைபோர்த்தி மகிழ்வித்தல் மேற் கண்ட தேன் துளி இன்பம்போல் இருக்கின்றது.

அடுத்து இன்னுமோர் பாடல்:

"வாழ்த்துவதும் வானவர்கள்
தாம் வாழ்வான்
மனம் நின்பாற் றாழ்த்துவதும்
தாம் உயர்ந்து
தம்மையெலாம் தொழவேண்டிச்
சூழ்த்து மதுகர முரலும்
தாரோயை நாயடியேன்
பாழ்த்த பிறப் பறுத்திடுவான்
யானும் உனைப் பரவுவனே".

என்று மாணிக்க வாசக சுவாமிகள் சொல்லியிருக்கின்றார்.

தேவரீரை பிரமாவிஷ்ணு முதலிய தேவர்கள் வாழ்த்துவதும் தாங்கள் நன்றாக வாழும் பொருட்டேயாம். தாங்கள் தங்களைத் தாழ்த்திக் கூறி வணங்குவதும் தாம் பதவிகளினல் உயர்ந்து தங்களை எல்லாரும மதித்து வணங்கும் பொருட்டேயாம். நானே அவர்களைப்போல் மேலோங்க வேண்டுமென்று வணங்கவில்லை. என்னுடைய பாழான பிறவி அற்றுப் போக வேண்டுமென்று தேவரீரைத் துதி செய்கினறேன் என்பதாம். எனவே, ஒன்றுக்கும் பற்ருத சிறியேனை ஒரு கல்விமாஞக மதித்து எனக்குப் பொன்னுடை போர்த்தி மகிழ்வித்தநன்றியை நான் மறவாமல் இருக்கும்படி கடவுளை வழிபட்டு இச் சபை மேலும் மேலும் வளர இறைவனை வேண்டி இச் சபையாருக்கும் எனது நன்றியையும்வணக்கத்தையும் செலுத்துகின்றேன்.

## மார்கழிமாதநோன்பு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்னரே பிறருக்கும் பயன் படும்படி பகிரங்கப் படுத்துகிறோம்.

இன்று தமிழ்ச் சமுதாயத்துக்கு ஏற்பட்ட இன்னல் பெரும் பான்மைச் சமூகத்தால் விளைந்த தென்று கொள்வதற்கில்லை. நன்மையும் தீமையும் நாமே நமக்குத் தேடுகிறோம். கற்புநெறியைக் காற்றில் பறக்கவிடும் பெண்களின் செயலும், கல்யாணமாகாது பெருமூச்சு விடும் கன்னியர் நிலையுமே நமது நிலைக்குக் காரணம் என்று கூறல மிகையாகாது. பெரும்பாலான தாய்மார்கள் வீண் கவலையில கழிக்கும் நேரத்தைத் தெய்வ வழிபாட்டில் செலவிட்டால் அவர்களுக்கும் குடும்பத்துக்கும் நாட்டுக்கும் பலனுண்டு. மனுசாஸ்திரத்தின்படி பருவமடைந்த ஒரு பெண்ணை மூன்று வருடங்களுக்குள் கன்னிகாதானம் செய்து கொடுத்து விடவேண்டும். இன்று சமுதாயக் கட்டுப்பாடும் பொருளாதார நிலையும் எத்தனையோ பெற்றோருக்குப் பெருந் துயரளிக்கின்றன. நாட்டிலுள்ள நல்லோர் பெரியோர் இவ் விஷயத்தில் அதிக சிரத்தை எடுத்து இந்நிலையை மாற்றி நாட்டில் சுபீட்சம் நிலவப்பிரயத்தனஞ் செய்தல்வேண்டும்.

# சில கருத்துகள்

— ஒரு சிந்தனையாளர் —

(முன்வளர்ச்சி — 3)

(ரு) சாதிகள்:-

1. நான்கு சாதிகள் வேதத்திற் பேசப்பட்டன. 'வேற்றுமை தெரிந்தனற்பால்' என்பது புறநானூறு. இச்சாதிகள் கலப்பதாற் பல சாதிகள் உண்டாகும் பின் பல சாதிகளின் கலப்பால் எண்ணிறந்த சாதிகள் உண்டாகும்.

கிளைக்குஞ் சாதிகள்பற்றி வேதத்தின் உபாங்கமாகிய ஸ்மிருதிகள் விளக்கஞ் செய்யும்.

சாதிகள் கிளைத்தற்கு ஒழுக்கக்கேடு காரணம்

2 (அ) சாதிக்கும் குணத்திற்குஞ் சம்பந்தமுண்டு

'குலத்தளவேயாகுங் குணம்'. – ஔவையார்

'நலத்தின்கண் நார் இன்மைதோன்றின் அவனைக் குலத்தின் கண் ஐயப்படும்'. – வள்ளுவர்.

'குலஞ் சுரக்கும் ஒழுக்கம் குடிக்கெலாம்'. – கம்பர்

'மேன்மக்கள் மேன்மக்களே சங்கு சுட்டாலும் வெண்மை தரும்'. ஔவையார்.

(ஆ) ஒழுக்கத்திலிருந்து இவன் இன்னசாதியானுயிருப்பன் என்றறிவது முண்டு.

1. கன்னன் தன்னைப் பிராமணன் என்று பரசுராமருக்குச் சொன்னான். அவன் ஒழுக்கத்தால் அவனை க்ஷத்திரியனுயிருப்பன் என்று தீர்மானித்தார் பரசுராமர்

2. உபநிடதக்கதையில் சத்தியகாமஜாபாலன் தன் தந்தையின் குலங்கோத்திரம் அறியாதவனுயிருந்தான். அவன் வாய்மையைக் கண்டகுரு, அவன் உத்தமபிராமணனின் புதல்வனே என்பதிற் சந்தேகமேயில்லை என்றார்.

3 ஒழுக்கக்கேட்டால் சாதிகெடும்

'இழுக்கம் இழிந்தபிறப்பாய் விடும்'

'பார்ப்பான் பிறப்பு, ஒழுக்கம் குன்றக் கெடும்'
—வள்ளுவர்

'பிறப்போரன்ன உடன்வயிற்றுள்ளும் சிறப்பின் பாலால் தாயுமனந்திரியும்' –புறநானூறு.

'பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா செய் தொழில வேற்றுமையான்' –வள்ளுவர்

4. ஒழுக்கத்தில் இழுக்கினோர் எந்தச் சாதியாராயினும் அவைதிகராய்,தொகுத்த பேதமைக்கேபொருந்தினோர் வரிசையைச் சேர்ந்தோராவர்.

(உ) வரிசை.

1, 'வரிசை அறிதலோ அரிது' –புறநானூறு.

'பொதுநோக்கான் வேந்தன் வரிசையால் நோக்கின் அது நோக்கி வாழ்வார் பலர்' - வள்ளுவர்.

'ஒருமுகம் செல்சமம் முருக்கிக் களவேள்வி செய்வது' –திருமுருகாற்றுப்படை

2 முதலில் வைதிகராய் வருணுசிரம தர்மங்களை அநுட்டித்து, அதன்பயனுகச் சாதிபேத துவேஷம் போய், பக்குவம் எய்திச் சிவதீக்ஷை பெற்றுச் சைவராயினோர், சாதியாசார சமயாசார வேறுபாட்டால்

1, ஆதிசைவர் 2, மகாசைவர் 3, அநுசைவர் 4, அவாந்தரசைவர் 5, பிரவரசைவர் 6, அந்தியசைவர் என ஆறுவகைப்படுவர்.

[சைவ வினுவிடை, சைவ பேதவியல்]

இவர்களுக்கே ஆலயம் பயன்படுவது.

இவர்கள் தத்தம் தகுதிக் கேற்றவாறு, தத்தமக்கு நன்மைபயக்குந் தானங்களைக் குருமுகமாக அறிந்து, வழிபடும் முறையில் வழிபடுவர்.

3 இறைவன் சந்நிதி, உயர்நீதி மன்ற சந்நிதியில் வைத்து உணரற்பாலது. ஒவ்வொருவரும் மற்றவர் அமைதிக்குப் பங்கமின்றிப் பத்தியைப் பெருக்குதற்குரியது இறைசந்நிதி.

வரிசை தப்பின் தனக்குத்தானே கேடுவிளைப்பதாயிருக்கும்.

4. மின்சாரசக்தி பரவுமிடம் அபாயகரமானது; அவ்விடத்தை அணுகும் முறையில் அணுகவேண்டும். இறைவன் சந்நிதி மந்திர சக்தியும். மகான்களின் நல்ல நினைவுகளும் பரவுமிடம். அவ்விடத்தை உரிய ஆசாரமின்றி அணுகினால், குளிக்கப் போய்ச் சேறு பூசுவதாம்.

5. இறைவன் சந்நிதி விசேடத்தை ஒரு பிராமணன் உணருவானுயின், அணுகிப் பூசை செய்யக் கூசுவன்; அஞ்சுவன்; மறுப்பன்.

6. இக்காலநிலையில் உள்ளே புகுதற்குத் தடையில்லாத ஒருவரை, நீர் சந்நிதியை அடையுந் தகுதியுடையிரோ என்று வினவியபோது, 'புகவேதகேன்' என்ற திருவாசகத் தொடரைக் கூறினார். 'தாழ்மையாந் தன்மையோடு சைவமாஞ் சமயஞ்சாரும் ஊழ்பெறலரிது' என்பது சிவஞானசித்தியார்.

7. ஒருவர் நன்கு விபூதியணிந்து இளமையில் ஆலய வழிபாடு செய்து வந்தவர். அவர் அறிவுமுதிர்ந்து, சாதக நிலை எய்தியபோது விபூதி தரிப்பதையும் விட்டு, ஆலயசந்நிதியை அணுகவும் அஞ்சினார். காரணம் விசாரித்தபோது விபூதியைத் தீண்டுதற்கும் ஆலய சந்நிதியை அணுகுதற்கும் தமக்கு யோக்கியதை போதாது என்று சொன்னார்.

(வளரும்)

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில்

வழக்கு இல. M. B. 9513.

புத்தூர் கிழக்கு. நெல்லைநாதர் காசிநாதர்

எதிராக —வழக்காளன்

புத்தூர் பேற்கு நவக்கிரி 1. சின்னையர் காசாளியும்.

2. காசாளி ஐயம்பிள்ளையும் எதிராளிகள்,

M B 9513 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனம் 1969 ஞு ஜனவரி (தை) மீ 30 உ (30-1-69) வியாழக்கிழமை முற் பகல் பத்து மணிதொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 1410–மேலும் 1000-ரூபாவுக்கு 23-10-67 தொடக்கம் 30-4-68 வரைக்கும் வருடமொன்றுக்கு 12% வீதவட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5% வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 364 – 40 சதம், பவுண்டேச் மற்றும் விற்பனவுக்குரிய சலாகைளும்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் கிழக்குப்பகுதி புத்தூர் கோவிற் பற்று புத்தூர் தெற்கிறை "மண்திறிமாலை" நிலப்பரப்பு 30. இதற்கு எல்லை கிழக்கும் வடக்கும் மேற்கும். முடிக்குரிய ஆதனம். தெற்கு – கணபதிவார் இளையதம்பி யினுதனம், இது முழுவதும்.

"இராசகிரி"
643, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம், 2-12-68

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொம்மிஷனர்
Auctioneer and Valuer.
எம் 318 20—12—68

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டில்

சுண்டிக்குளி யாழ்ப்பாணம் சிதம்பரப்பிள்ளை கைம்பெண் சரஸ்வதி

இல. M. B. 7294 எதிராக — வழக்காளி

காலஞ் சென்ற வண்ணார் பண்ணை தென்மேற்கு யாழ்ப்பாணம் யோசேப் அப்பாத்துரை, —எதிராளி

வண்ணார் பண்ணை தென்மேற்கு யாழ்ப்பாணம் மனுவேல் அந்தோனிப்பிள்ளை பெண் குவீன்மேரி அன்னம்மா

பதில் எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 7294-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் என்னல் 1969 ம் ஞு தை மீ 18 ம் திகதி சனிக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா: 3860-ம் ரூபா 2000 க்கு 15-3-65 தொடக்கம் 29-5-66 வரை 12 வீதமான வட்டியும் அதன் மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா: 376/14 சதம்.

காணிகளின் விபரம்:

1. யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணம் பகுதி வண்ணார் பண்ணைக் கோவிற்பற்று வண்ணார் பண்ணை தென் கிழக்கு இறை "ஐயுற்றுவான் வயலும் மறு பிரிவுகளும்" பர. தெ இல ஒன்று (பர. தெ. இல 1) வயிர் வலைகளும் எல்லை கிழக்கு நாகலிங்கம் சிவகுரு கைம் பெண் வள்ளியம்மைக்கும். இராமலிங்கம் சிவகுருநாதர் கைம் பெண் விசாலாட்சியம்மாவிற்கு முரிய வாதனம் வடக்கு இ. சிவகுரு நாதரால் ஒழுங்கைக்காக ஒதுக்கப்பட்ட நிலம் மேற்கு கீழே சொல்லப்படும் இரண்டாம் ஆதனம் தெற்கு சிதம்பரப்பிள்ளையின் உரிமைக்காரர் கட்குரிய வாதனம். இதடங்கலும்:

2. டிெயிறை "ஐயுற்றுவான் வயலும் மறுபிரிவுகளும்" பர. தெ. இல ஆறு (பர. தெ இல 6) வீடும் கொட்டிலும் தென்னைமரங்களும் எல்லை கிழக்கு எதிராளி (யோசேப் அப்பாத்துரை) க்குரிய வாதனம் வடக்கு இ. சிவகுருநாதரால் ஒழுங்கைக்காக ஒதுக்கப்பட்ட நிலம் மேற்கு சண்முகசெத்தினம் பெண்சாதிக்குரிய வாதனம் தெற்கு சிதம்பரப் பிள்ளையின் உரிமைக் காரர்கட்குரிய வாதனம். இவ் வாதனம் J. D. வீரசிங்கம் அவர்களால் 1950ம் ஞு மாசி மீ 10ம திகதி 2604ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட அளவுப் படத்தில் 1-ம் துண்டாகக் காட்டப்பட்டுள்ளது. இதடங்கலும்.

காரைநகர், 1968-ம் ஞு
மார்கழி மீ 6 ம் திகதி
எம். 277.

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனரும் ஏலவிற்பனையாளரும்.
20-12-68

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டில்

கைதடி அம்பலவாணர் தம்பிஐயா வழக்காளி

இல. M. B. 9343 எதராக

1. கைதடி நல்லதம்பி விசுவனுதனும் பெண்

2. செல்லம்மாவும் (மரணம்) எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 9343-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1969-ம் ஆ தை மீ 30-ம் திகதி (30-1-69) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 1512- இதில் ரூபா 1200- க்கும் 17-10-67 தொடக்கம் 8-6 68 வரைக்கும் 100க்கு 8 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 332/52.

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி நாவற்குளிக் கோவிற் பற்று கைதடி இறை பொக்கத்தைக் கிராய்வயல் பர தெ இல 8 எட்டும் எல்லை கிழக்கும் தெற்கும் கந்தையா கை, பெ, சின்னப்பிள்ளை யினுதனம். வடக்கு பொன்னையா கை. பெ சின்னாச்சியினுதனம். மேற்கு மழவராயர் சடையருக்கும் பங்காளருக்கு முரிய ஆதனம். இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

2. டிெ கைதடி இறை சத்திரக் கடவை அல்லது காண்டைக்காடு விசாலம் றூட் 2 பேர்ச்செஸ் 3ம் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு தம்பு கை. பெ. பொன்னுவினுதனமும் மேற்கும் தெற்கும் ரோட் இடங்கலும் அதைச் சேர்ந்தவைகளும்.

24-ம் நம்பர்,
1-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம், 5-12-68.

க. சுப்பிரமணியம்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
(எம் 311 20-12-68.)

---

## பிடியரிசித் திட்டம் நாவலர் வழியா?



பத்தர்: "காந்திநூற்றுண்டுவிழாவையொட்டி, சர்வோதயபாத்திர பிடியரிசித் திட்டத்தை சர்வோதய இயக்கத் தலைவர் ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயணன் கொழும்பு மாநகரில் ஆரம்பித்து வைக்கவிருக்கின்றாராம்; சேரும் செல்வமெல்லாம்'காந்திநிர்மாணவேலை'களுக்குப்பயன்படுத்தப்படுமோம்!

சித்தர்; "பலே! பலே! எங்கள் நல்லை. ஆறுமுகநாவலர்பெருமானும் 'பிடியரிசி'த் திட்டத்தின்மூலந்தானே சிறந்ததோர் கலைக்கூடத்தை ஆக்கிவைத்தார்கள்? ஸ்ரீஜெயப்பிரகாஷ் வருகை நலந்தருவதாக! நூற்றாண்டு விழாச் சபையினரது நினைவுகள் நிறைவுற்றுப் பயன்கள்பெருகுவதாகுக! இப்பெரியாரது அரிய ஆலோசனையையறிந்துஎம்மதத்தியில்அட்டகாசம் புரியும் மதுஅரக்கனை ஒழிக்க முனைந்தாலென்ன?

— 'நாயன்மார் – நாதன்''

## மார்கழிமாதநோன்பு

( 1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் போதி பூஜை இன்றும் மேற்கூறிய காரணத்திற்காகச் செய்கின்றனர். ஆனல் நம்மிடையே இந்த வழக்கம் அருகிவிட்டது. அரசமரம் பௌத்த மதத்தினருக்கு மட்டும் உரியதன்று. இந்து மதத்திற் கூறப்பட்ட ஐந்து புண்ணிய தருக்களில் அரசமரமும் ஒன்று. அது பிரமா விஷ்ணு சிவனுகிய மும் மூர்த்திகளின் அம்சமாகவுள்ளதென இந்துமதசாஸ்திரங்கள் கூறுகின்றன. மேலும் இந்தப்புண்ணியதரு சூரியனிடமிருந்து சமான வாயுவை இழுத்து நமக்குத் தருகின்றது.

சமான வாயு மணிபூரகச் சக்கரத்தின் மூலமாக ஈர்க்கப்பட்டு உடலிற் செறிகின்றது. இது மனிதனது வீரியத்தையும் நாடி நரம்பு மூளை யாவற்றையும் பரிமளிக்கச் செய்கின்றது. மனச்சாந்தியை அளிக்கின்றது. மனமொருமைப்பட உதவுகின்றது. கன்னிப் பெண்கள் அரசமரத்தை வலம் வந்து வணங்கும் வழக்கம் நம்மிடையே மறுபடியும் வளர வேண்டும.

மேலும் தக்க குருவையடைந்து இறைவன் நாமத்தைக் குருவாயிலாகப் பெற்றுத் தினமும் செபஞ் செய்தல் வேண்டும்.

அத்துடன் விஷ்ணு சகஸ்ரநாமம் அல்லது லலிதா சகஸ்ரநாமத்தை முறைப்படி குருவிடம் கேட்டுத் தாமே ஓதுதல் வேண்டும். இவையே கன்னியர் செய்யும் தவமாக வகுக்கப்பட்டிருக்கிறது. இது வெறும் ஏட்டுச் சுரைக்காயன்று. இச் சாதனையைத் தபோவன மூலமாகச் சாதனை செய்து பலனைப் பிரத்தியட்சமாகக் கண்ட

தொடர்ச்சி 2-ஆம் பக்கம்

## திருவெம்பாவை வழிபாடு

தினந்தோறும் அதிகாலையில் பஜனை ஊர்வலம்

திருவெம்பாவையின் மகத்துவத்தை மக்களுக்குப் பிரசாரஞ் செய்யும் நோக்கமாக திருவெம்பாவைத் தினங்களில் யாழ். நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக்கழகத்தினர் ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்திலிருந்து ஆலயச் சுற்றுடலெங்கும் திருப்பள்ளியெழுச்சி திருவெம்பாவை பஜனையை வழமைபோல அதிகாலை 4 மணியிலிருந்து நடாத்தத் தீர்மானித்துள்ளனர். 25–12–68 தொடக்கம் 2–1–69 வரை தினமும் இப் பஜனை காலை 4-00 — 6-00 மணிவரையில் நடைபெறும்; திருவாதிரைத் திருநாளன்று மணிவாசகர் ஊர்வலமும் திருவாசகவிழாவும் சிறப்பாக நிறைவுறும்.

(நாயன்மார்கட்டு நிருபர்)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மானிப்பாயைச் சேர்ந்த நவாலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம லிமிட்டெட் —வழக்காளி

இல: M B 7466

எதிராக

1. மானிப்பாய், வைத்தி தம்புவும் மனைவி
2. சரஸ்வதி — (மரணம்)
3. இறந்த இரண்டாம் எதிரியின் கோட்டுச் சட்டத்துக்கு கட்பட்ட பிரதி நிதித்வம் வாய்ந்த மானிப்பாய் வாசி கதிரவேலு ராசதுரை —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் M B. 7466 ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணியை 1969 ம் ஆண்டு தை மாதம் 9-ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:

முதல் வட்டி ரூபா 1657-ம் 9-6-65 தொடக்கம் 29-4 67 வரைக்கும் ரூபா 1306-96 க்கு 4 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 424-60 ம். ஆதாவது ஏற்பட்ட செலவு ரூபா 303-60; வெலியாத்து செலவு ரூபா 57-ம்; இனிமேல் வரும் செலவு ரூபா 64-ம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய்க் கோவிற்பற்று மானிப்பாய் இறை "வீரதேவன் சீமா" என்னும் துண்டுக் காணியும் மறு பகுதிகளும் பரப்பு நிலம் இலாச்சம 2-ம் பயிர்களும் வீடும், கிணறும் எல்லை கிழக்கு கந்தசாமி மனைவி ருக்மணியின் ஆதனம். வடக்கு கணபதிப்பிள்ளை சிவக்கொழுந்துவின் உரிமைக்காரரின் ஆதனம். மேற்கு அன்னப் மனைவி தன்னி கணபதியின் ஆதனம். தெற்கு ஒழுங்கை. காணியின் மேற்கு எல்லையில் இருக்கும் உரிமைக்காரருக்குக் கிணற்றில் பங்கும் வழி வாய்க்கால் பாவிப்பு உருமையும் பிற நீங்கலாக. இக் காணியில் சேர்க்கப்பட்ட எல்லைகளுக்குள் இருக்கும் உள்ளதும் உடையதும். பதிவு இலா E 250/291.

ஏ. பி. பி. எதிர்மன்னசிங்கம்
வெந்தீஸ் கொமிஷனர்,
விலைமதிப்பாளர்.

107, பெரிய தெரு
யாழ்ப்பாணம், 7–12–1968,
எம். 309, 20-12-68

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

தொல்புரம் பொன்னர் சிற்றம்பலம் —வழக்காளி

இல. M. B. 6931 எதிராக

1. கொட்டையாவத்தை, தொல்புரம் முருகன் நன்னியன் தனககாகவும் காலஞ் சென்ற இரண்டாம் எதிராளியின் ஆதனங்களின் பராபரிப்புக் காரனுகவும்
காலஞ் சென்ற 2. ஷை யூர் சிதம்பரம்.
3. சஞ்சடி வயிரவர் கோயில். சுதுமலை நன்னியன் துரைசிங்கம் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 6931-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி. பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக்காணிகள் என்னால் 1969-ம் ஆண்டு தை மீ 23-ந் திகதி வியாழக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல்வட்டி ரூபா: 915-00-ம் ரூபா: 500-க்கு 15-9-1964 தொடக்கம் 14-12-1965 வரை 12 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 243 07 சதம்.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி சங்கானைக் கோவிற்பற்று தொல்புரம் இறை "கொல்லனையும் மூத்தான வளவும்" பர. நீ. இலா 1 குளி 5, 2/3 அளவின் படி பர. நீ. இல ஒன்று குளி எட்டு (பர. நீ. இல 1 குளி 8) எல்லை கிழக்கு கையொழுங்கை தெற்கு மூத்தன் வயிரவனுக்கும் பங்காளர்கட்கு முரிய வாதனம் மேற்கு முத்தன் பெண் சிதைக்கும், சின்னட்டியான் சடையனுக்கும் உரிய ஆதனங்கள் வடக்கு ஒழுங்கை இதடங்கலும் கிழக்கெல்லைக காணியிலிருக்கும் கிணற்றில் இதற்குரிய பாகமும், வாய்க்கால், தூர்வை, வழியுரித்தும். ஆனல் தெற்கெல்லை வேலியருகால் மேறகெல்லைக் காணிககுரிய வழி வாய்க்காலுரித்தும் பிற நீக்கல்.
இதன் பதிவு E 309/276

2. ஷை தொல்புரம் இறை "கொல்லனையும் மூந்தான்வளவும்" பர.நீ. இல ஒன்று (பர. நீ. இல 1) வடகெல்லையிலிருக்கும் கிணற்றில் பாகமும், கையொழுங்கை, ஆடுகால் தூர்வை, வழி வாய்க்கால் உரித்தும் செய்பயிர் வான் பயிர்களும் எல்லை கிழக்கு செல்லன் சின்னவனுக் குரிய ஆதனம் வடக்கு கையொழுங்கை மேற்கு சின்னப் பொடியன் முத்தனுககுரிய வாதனப் தெற்கு புதறிரர் முருகேசுவிற்குரிய வாதனம். இதடங்கலும். இக்காணிக்குப்போகும் கையொழுங்கை யுரித்தும். இதன் பதிவு E 529/257

வை. ஏரம்பமூர்த்தி,
காரைநகர், கொப்மிஷனர்.
1968 ம் ஆண்டு மார்கழி மீ 10 ம் திகதி.
(எம். 319 20-12-68)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

காரைதிவு மேற்கு காரைதிவு கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் —வழக்காளி

இல. M. B. 9670 எதிராக

காரைதிவு மேற்கு கணபதிப்பிள்ளை வயித்திலிங்கம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 9670-ம் இலக்க வழக்கில் எனககுக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிககப்படும் மூன்று காணிகள் 1968-ம் ஆண்டு தை மீ 7-ந் உ (7-1-69) முற்பகல் 10-00 மணிக்கு முதலாய காணியும் பிற்பகல் 3-30 மணிக்கு இரண்டாம் கணியும் பிற்பகல் 4-00 மணிககு மூன்றும் காணியும் அந்தந்தக்காணிகளுக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்க்கப்படும்.

தீர்வைத தொகை: முதல் வட்டி ரூபாய் 7169-00, இன்னும் ரூபாய் 4500-க்கு 8-1-68 தொடக்கம் 14-5-68 வரைககும் 8% வீத வட்டியும் அதன் மேல் முழுத் தொகைககும் இறுக்கும்வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 372-05

ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பிரிவு காரைதீவு மேற்கு காரைதீவு கோயிற் பற்று "விக்கிர தேவன் வயல்" பர. நெல இலா 15-0 குளி கிணறுடன் இதற் கெல்லை கிழக்கு பால சுப்பிர மணியம் பெண் அம்பிகாபதயினுதனம் வடககு பேரம்பலப் பெண் தங்கமுத்து விஞதனம் மேற்கு முருகேசு சுப்பிரமணியததினுதனம் தெற்கு தியாகராசா பெண ருசம்மாவினுதனம்.

ஷை யூர் "வாரியன்தனை" பர-கில-இல 8, 4/9 பனை மரக்கள் வேட்பமரவகளுடன் இதற் கெல்லை கிழககு வேலுப்பிள்ளை சண்முகத்துககும் பங்காளருக்கு முரிய வாதனம் வடககு வேலுப்பிள்ளை சதாசிவத்திற்கும் அருணசலம் ஆறுமுகத்தி னுரிமையாளருக்கும், வேலு பிள்ளை ஆறுமுகத்துக்கு முரிய ஆதனங்கள் மேற்கு நமசிவாயம் நடராசாவுககும் பங்காளருக்குமுரிய வாதனம் தெற்கு பொன்னம்பலம் ஆறுமுகத்துக்கு முரிய வாதனம்.

ஷை யூர் "கலவ்யர் தோட்டம் பர-கில- இலா 4-0 குளி பனை மரங்களும வடலிகளுடனும் இதற் கெல்லை கிழக்கு எதிராளிக்குரிய வாதனம் வடககு தர்மலிங்கம் பெண் பாகியததுக் குரிய வாதனம் மேற்கொழுங்கை தெற்கு முருகேசு கைம் பெண் வள்ளியம்மைக்குரிய வாதனம்.

செ. விசாகரத்தினம்
133, பருத்தித்துறை றோட்டு, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.
நல்லூர், யாழ்ப்பாணம், 10-12-68. M 308 20-12-68

ஆறிருதடந்தோள்வாழ்க வறுமுகம்வாழ்க வெற்பைக்
கூறுசெய்தனிவேல்வாழ்க குக்குடம்வாழ்க செவ்வேள்
ஏறியமஞ்ஞைவாழ்க யானைதன்னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீரடிய ரெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 20—12—1968 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

நவாலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வரையுள்ளது. மானிப்பாய் —வழக்காளி

இல M B 7115 எதிராக

1. கதிரவேலு குழந்தை வேலுவும் பெண்
2. மீனும்பிகை, நவாலி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M.B. 7115-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1969-ம் ஆண்டு ஜனவரி (தை) மீ 8-ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 1399-76 சதம். 9 4-64 தொடக்கம் 7-10-65 வரைக்கும் ரூபா 1165-20 சதத்திற்கு 4 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் 8-1-68 ல கொடுக்கப்பட்ட ரூபா 768-65 சதம் நீக்கி (எல்லாச் செலவும் கொடுக்கப்பட்டுள்ளது)

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோயிற்பற்று நவாலிஇறை "தெரியவத்தை வயலும் தெரியவத்தையும்" இதன் நேர்பரப்பு 14 ந் கிணறும், எல்லை கிழக்கு நாகமுத்து கதிரவேலுவும் குழந்தைவேலு பெண் மீனும்பிகையின் ஆதனங்கள். வடக்கு வீரகத்தி மருதப்புவின் ஆதனம், மேற்கு குளமும் சோமசுந்தரம் பெண் இராசாத்தியின் ஆதனம், தெற்கு சிவசம்பு பெண் நாகம்மாவின் ஆதனம் இதடங்கலும் ஆனல் வட எல்லைக் காணிக்குரிய கிணற்றில் பங்கு பிற நீங்கலாக. பதிவு E 323 / 214.

வே. கோபாலபிள்ளை,
22. ஆஸ்பத்திரி வீதி, கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
யாழ்ப்பாணம். 3-11-63 எம் 316 20—12—68

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஆனைக்கோட்டை யாழ்ப்பாணம் கணபதி கிருட்டினர் வழக்காளி

இல M.B. 7561 எதிராக

சுதுமலை, யாழ்ப்பாணம்
1 சின்னத்தம்பி இராசையாவும் பெண்
2 இரெத்தினம் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 7561-ம் இலக்க வழக்கில் எனக்குக கிடைதத கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணியை 1969-ம் ஆண்டு தைமீ (11-1-69) 11 உ சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை—முதல் வட்டி ரூபாய் 3016-66 ம் 17-7-65 தொடக்கம் 16-11-65 வரைககும் ரூபாய் 2000/- க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 264-56ம். இதில் 19-12-66ல் கொடுபட்டது ரூபாய் 1170/-

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பிரிவு மானிப்பாய் கோயிற்பற்று சுதுமலை இறை "மாவத்தை" பர. கில, இலா. 5 குளி 11. வீடும், கிணறும், தோட்டமும். இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு முருகேசர் பொன்னம்பலத்தின் உரிமையாளரின் ஆதனம், மேற்கு பொன்னையா கந்தையாவுக்குரிய ஆதனம். தெற்கு எதிராளிக்குரிய ஆதனம். பதிவு இல. E, 306/202.

நா. ஸ்ரீஇரங்கநாதன்
22, பெருமாள்கோவில் தெற்கு- கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்.
ஒழுங்கை. யாழ்ப்பாணம், எம். 313 20—12—68
14-12-68.

யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாபநிதி

கொம்பனி லிட்

(ஸ்தாபிதம் 1918)

10,000-00 பங்குகள் ரூபா 5 வீதமான 50,000-00

யாதாந்த சேமம் கட்டும் முறை.

மாசமொன்றுக்கு ரூபா 10-00 வீதமாக 80 மாசகாலத்துக்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் கட்டுப் பணமும் வட்டியுமாக ரூபா 1000-00 திருப்பிக் கொடுக்கப்படும். ரூபா 100-00 வீதமாகக் கட்டினல் ரூபா 10,000 00 கொடுக்கப்படும்.

சேமிப்பு பற்றுவரவு எச்சநிதி.

ரூபா 1500-00 க்கு குறையாமல் இருக்குமாயின் 1 வீத வட்டியுடன் சேமிப்புப் பற்று வரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட சேமம்.

சேமப்பணம் முறையே. 12, 24, 36, என்னும் மாச காலங்கள வரையறுத்த ஏற்படும் வட்டி முறையே 7, 8, 9. வீதமாகக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக் கொண்டும், சேமப்பணத்தைப் பிணையாக வைத்துக் கொண்டும் கடன் கொடுக்கப்படும் முதலையும் பாகம் பாகமாக கொடுக்கலாம்,

இன்னும் வேண்டிய விபரங்களை எங்கள் காரியாலய மூலமாக அறிந்துகொள்ளலாம் — மனேஜர்